THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Tuesday, the 10th February 1959.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Mettalling of village roads

* 161 *Q*.—SRI M. C. MUTHUKUMARASWAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any scheme for metalling the village roads in Tanjore district; and

(*b*) if so, the amount sanctioned?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) There is no separate scheme for metalling village roads in Tanjore district.

(*b*) Does not arise.

SRI G. G. GURUMURTHI : நமது மாகாணத்திற்கென்று கிராம ரஸ்தாக்களுக்கு அபிவிருத்தித் திட்டம் ஏதாவது இருக்கிறதா? அப்படி இருந்தால் அந்த விவரங்கள் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கம்யூனிடி டெவலெப்மெண்டு ஸ்கீம்படி அங்கங்கே ரோடுகள் அமைக்கும் திட்டம் இருக்கிறது. ஸ்தல ஸ்தாபன திட்டத்தின்கீழும் அவ்வேலை செய்யப்பட்டு வருகிறது. ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களின் மூலமாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

SRI C. MUTHIAH PILLAI : ஜில்லா போர்டில் நிதி இல்லாத காரணத்தினால் இரண்டு வருஷங்களாக இருக்கிற ரோடுகளைப் பராமரிக்கவும் முடியவில்லை. புதிதாக ரோடுகள் போடவும் முடியவில்லை. ஆகவே இதை கவனித்து அவற்றுக்கு தக்க பணம் ஒதுக்கியாவது ரோடுகளைப் பராமரிக்கவும், புது ரோடுகளை அமைக்கவும் சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஜில்லா போர்டுகளின் நிதியைப் பொருத்த வரையில் அவர்களுடைய தேவையை அனுசரித்து போக்குவரத்துக்குப் பணம் ஒதுக்கப்படுகிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும் அங்குள்ள நிதி நிலைமையை அனுசரித்துத்தான் புது வேலை எடுத்துக்கொள்ளப்படும்.

SRI S. LAZAR : நாட்டின் முன்னேற்றத்திற்கு நல்ல ரோடுகளும், டிரான்ஸ்போர்ட் வசதியும்தான் மிகமிகத் தேவை. இதற்கு ஏற்றபடி ஒரு திட்டத்தைத் தயாரிக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதை அனுசரித்துத்தான் மற்றவர்கள் பாராட்டும்படியாக நம் ராஜ்யத்தில் பல ரோடுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த ரோடு பராமரிப்பு வேலையும், புதிதாக ரோடு போடுகின்ற வேலையும் நடந்து வருகிறதென்று நினைக்கிறேன்.

SRI V. SUBBIAH : ஜில்லா போர்டுகளில் பணம் இல்லையென்ற நிலைமை இருப்பதால் பணத்தைக் கொடுத்து அவர்களையேச் செய்யச் சொல்வதைவிட, நேஷனல் ஹைவேஸ், பப்ளிக் வொர்க்ஸ் மூலமாக சர்க்காரே எல்லா ரோடுகளையும் எடுத்துக் கொள்ளும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பஞ்சாயத்துச் சட்டம் நிறைவேறும்போது இதைப் பற்றி விவரித்துக் கூறியிருக்கிறேன். எந்த எந்த ரோடுகளை சர்க்கார் எடுத்துக் கொள்ளும், எந்த எந்த ரோடுகளின் பொறுப்பு பஞ்சாயத்து யூனியனுக்கும், எந்த எந்த ரோடுகள் கிராம பஞ்சாயத்தின் நிர்வாகத்திலும் வரும் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : பிர்கா அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மண் ரோடுகள் போடப்பட்டன. உடனே கப்பி போட முடியாத காரணத்தினால் அவை அப்படியே விடப்பட்டு, இன்று வண்டி கூடப் போவதற்கு முடியாமல் இருக்கின்றன. ஆகவே கிராம ரஸ்தாக்களை சர்க்கார் அபிவிருத்தி செய்ய முன் வருவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பஞ்சாயத்து யூனியன் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொண்டு அவைகளை நல்லமுறையில் நடத்த முடியும் என்று நினைக்கிறேன்.

State Trading Scheme

* 162 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state the details of the State Trading Scheme decided by the National Development Council in the first week of November 1958?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The details of the Scheme of State Trading in foodgrains are being worked out by the Government of India and they are awaited.

SRI N. K. PALANISAMI : ஸ்டேட் ட்ரேடிங் என்று சொல்லிக் கொண்டு 2 லட்சம் டன் கொள்முதல் செய்தவுடன் பாக்கியைக் கொள் முதல் செய்ய லைசென்சு வழங்கப்படுமா ? அல்லது எல்லாவற்றையும் சர்க்காரே கொள்முதல் செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதில் கனம் அங்கத்தினருக்கு எப்படி ஐயம் எழுந்தது என்று தெரியவில்லை. இந்தத் திட்டத்தின் விவரங்கள் எல்லாம் இப்போதுதான் பரிசீலனையில் இருப்ப தாகக் கூறினேன். அதற்கு முன்னதாக 2 லட்சம் டன் வாங்குவதாக ஏற்பாடு.

SRI S. LAZAR : இது சம்பந்தமாக நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு ரிப்போர்ட் தயாரித்துக் கொடுத்திருக்கிறதா ? அதன் அம்சம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த அரசாங்கம் ஸ்டேட் ட்ரேடிங் பற்றி எப்படி திட்டம் வகுப்பது என்று குறித்து மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறது. இதுவெல்லாம் பரிசீலனை செய்து முடிவு செய்கிற வரையில் அதைப்பற்றி வெளியிடுவது உசிதம் இல்லை.

SRI S. M. ANNAMALAI : கம்பு, சோளம், போன்ற பொருள்களின் விலையும் ஏறியிருக்கிறது. அவைகளையும் கூட வாங்குவதற்கு இந்தச் சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவைகளை வாங்குவது என்ற யோசனை அரசங்கத்தினிடம் இல்லை.